சென்னை கிழக்கு மாவட்ட கழக பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம்அமைச்சர் பி.கே. சேகர்பாபு தலைமையில் நேற்று 12.10.2025 நடைபெற்ற கலந்தாலோசனைக் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் ஆ. ராசா எம்.பி. ஆலோசனைகள் வழங்கினார். இக்கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ப.தாயகம் கவி. எம்.எல்.ஏ., அ. வெற்றி அழகன் எம்.எல்.ஏ., ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ., இ. பரந்தாமன் எம்.எல்.ஏ., உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன் ஆகியோர் தாம்பரம் மாநகராட்சி, திருநீர்மலை நகர்ப்புற துணை சுகாதார நிலையத்தில், ஆறு மாவட்டங்களுக்கான போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் 2025 தொடங்கி வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சியர் சினேகா, இ.கருணாநிதி எம்.எல்.ஏ. , மேயர் திருமதி.வசந்த் குமாரி, கமலக்கண்ணன், மாநகராட்சி ஆணையர் பாலசந்தர், காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் 6 மாவட்டங்களுக்கான போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம்!

7.88 லட்சம் குழந்தைகளுக்கு மருந்து வழங்க இலக்கு!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தனர்

சென்னை, அக். 13 - தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களுக்கான போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் 2025 தொடக்கம் குறு சிறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ஆகியோர் நேற்று (12.10.2025) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, திருநீர்மலை நகர்ப்புற துணை சுகாதார நிலையத்தில், ஆறு மாவட்டங்களுக்கான போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் 2025 தொடங்கி வைத்தார்கள். பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

போலியோ சொட்டு மருந்து முகாம் தொடக்கம்

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, திருநீர்மலை நகர்ப்புற துணை சுகாதார நிலையத்தில், போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாம் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் கடந்த 29 ஆண்டுகளாக போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடைபெற்று வருகிறது. போலியோ தடுப்பூசி முயற்சிகள் தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெறுவதால், தமிழ்நாடு கடந்த 21 ஆண்டுகளாக போலியோ நோயின்றி உள்ளது. தமிழ்நாட்டில் இறுதியாக 2004ம் ஆண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் போலியோ நோய் கண்டறியப்பட்டது. இந்தியா அளவில் ஹவுரா மற்றும் மேற்கு வங்காளத்தில் மாவட்டத்தில் 2011ம் ஆண்டு போலியோ வைரஸ் இறுதியாக கண்டறியப்பட்டது. 2012ம் ஆண்டு உலக சுகாதார அமைப்பு (WHO) “போலியோ வைரஸ் பரவல் கொண்ட தொற்றுநோய் நாடுகள்” பட்டியலில் இருந்து இந்தியாவை நீக்கி, 27.03.2014 அன்று போலியோவிலிருந்து விடுபட்ட நாடாக சான்றிதழ் வழங்கப்பட்டது. ஆக 11 ஆண்டுகள் இந்தியா முழுமைக்கும் போலியோ இல்லாத நாடாக இருந்து வருகிறது. 21 ஆண்டுகள் தமிழ்நாடு போலியோ பாதிப்பு இல்லாத மாநிலமாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் 2004ம் ஆண்டு முதல் 2016ம் ஆண்டு வரை வருடத்திற்கு இரண்டு முறை தேசிய போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து 2017ம் ஆண்டிலிருந்து பல சுற்றுகளாக துணை (சிறப்பு) தேசிய போலியோ சொட்டு மருந்து தினம் (SNID) ஜூன் முதல் நவம்பர் மாதங்களில் அதிக அளவில் பாதிப்புள்ள மாநிலங்கள் மற்றும் பகுதிகளில் நடைபெறுகிறது. 2018ம் ஆண்டிலிருந்து “இந்தியா போலியோ வைரஸ் நிபுணர் ஆலோசனை குழு” (IEAG) ஆலோசனை படி துணை (சிறப்பு) தேசிய போலியோ சொட்டு மருந்து தினம் (SNID) ஒரு சுற்றாக நடைபெற்று வருகிறது. கடந்த ஆண்டு 03.03.2024 அன்று நடைபெற்ற போலியோ சொட்டு மருந்து முகாமில் 57 இலட்ச குழந்தைகள் இலக்காக நிர்ணயிக்கப்பி ட்டு 59.20 இலட்சம் குழந்தைகள் பயன் பெற்றார்கள்.

அண்டை நாடுகளில் போலியோ வைரஸ் பரவல் காணப்படுவதால், “இந்தியா போலியோ வைரஸ் நிபுணர் ஆலோசனை குழு” (IEAG) முக்கியமான குறியீட்டு அளவுகோள்களை அடிப்படையாகக் கொண்டு, 21 மாநிலங்களிலுள்ள 269 மாவட்டங்களை பாதிக்கப்படக்கூடியதாக அடையாளம் கண்டுள்ளது. அதன்படி, தமிழ்நாட்டில் செங்கல்பட்டு, மயிலாடுதுறை, சிவகங்கை, தஞ்சாவூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய 6 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. மேற்காணும் 6 மாவட்டங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்கள் என மொத்தம் 7,091 மையங்களில் நடைபெற்று வருகிறது. இம்மையங்களில் 7.88 இலட்சம் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் விரிவாக செய்யப்பட்டுள்ளன. சொட்டு மருந்து வழங்கும் மையங்கள் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்படும்.

5 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இன்று போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டு வருகிறது. தேசிய தடுப்பூசி அட்டவணைப்படி ஓரிரு நாட்களுக்கு முன் போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்டிருந்தாலும் முகாம் நாளில் மீண்டும் சொட்டு மருந்து வழங்கப்பட வேண்டும். அண்மையில் பிறந்த குழந்தைகளுக்கும் முகாம் அன்று சொட்டு மருந்து கொடுப்பது அவசியமாகும். சொட்டு மருந்து செலுத்தப்படாமல் விடுபடும் குழந்தைகளை கண்டறிய சொட்டு மருந்து வழங்கப்படும் குழந்தைகளுக்கு இடது கை சுண்டு விரலில் மை வைக்கப்படும். முகாம் நாளன்று போலியோ சொட்டு மருந்து வழங்க தனியார் மருத்துவர்களுக்கும், மருத்துவமனைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. புலம்பெயர்ந்து வாழும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கும் முகாம் நாளன்று போலியோசொட்டு மருந்து வழங்கப்படும். போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணிகளுக்காக 320 அரசு வாகனங்கள் ஈடுபடுத்தப்படும்.

போலியோ சொட்டு மருந்து முகாம் நாளில் பயணிக்கும் குழந்தைகளின் வசதிக்காக முக்கிய பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், சோதனைச் சாவடிகள், விமான நிலையங்களில் உள்ள பயண வழி மையங்களில் (Transit Booths) சொட்டு மருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நடமாடும் சுகாதார குழுக்கள் மூலமாக தொலைதூரம் மற்றும் எளிதில் செல்ல முடியாத பகுதிகளில் வசிக்கும் குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. போலியோ சொட்டு மருந்து மையங்களில் 27 ஆயிரத்திற்கு மேற்பட்ட சுகாதார பணியாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இதனால், போலியோ நோயில்லாத நிலையை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ளவும், போலியோ வைரஸ் பரவல் வாய்ப்புகளிலிருந்து நம்முடைய குழந்தைகளை பாதுகாக்கவும், அனைத்து பெற்றோர்களும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்கி, இந்த பூமியிலிருந்து போலியோ நோயை முற்றிலும் ஒழிக்க அனைவரும் கைகோர்த்து செயல்படுவோம்! என்று அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திருமதி. சினேகா, சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி. வசந்த் குமாரி கமலக்கண்ணன், மாநகராட்சி ஆணையர் பாலசந்தர், துணை மேயர் காமராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், இணை இயக்குநர் (தடுப்பூசி) மரு.வினய், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பானுமதி மற்றும் மண்டலக்குழுத்தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், செவிலியர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில்,

10 பேட்டரி வாகனங்கள் மாநகராட்சிக்கு வழங்கல்!

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு கொடி அசைத்து தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, அக். 13 - திருவண்ணாமலை தூய்மை அருணை சார்பில், 10 பேட்டரி வாகனங்களை, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு மாநகராட்சிக்கு வழங்கினார்.

பின்னர், மாட வீதியில் நடைபெறும் தூய்மைப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாட வீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர். கிரிவலப் பாதையில் உள்ள 20 குளங்களை தூய்மை அருணை அமைப்பு மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பில் சீரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

12.10.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை, அண்ணாமலையார் திருக்கோயில் எதிரில், தூய்மை அருணை சார்பில், 10 பேட்டரி வாகனங்கள் தூய்மை பணிக்காக மாநகராட்சிக்கு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு கொடிய சைத்து தொடங்கி வைத்து, பேட்டரி வாகனங்களை மாநகராட்சிக்கு வழங்கினார்.

பின்னர், காலை 8.00 மணிக்கு, வார்டு16, தேரடி வீதியில் நடைபெறும் தூய்மை பணிகளையும், காந்தி சிலை அருகில் வார்டு எண்13 சார்பில் நடைபெறும் தூய்மை பணியையும், வார்டு7 பேகோபுரத் தெருவில் நடைபெறும் தூய்மைப் பணியையும்,

வார்டு14 பேகோபுரத் தெரு சக்தி திரையரங்கம் அருகில் நடைபெறும் தூய்மை பணியையும், பின்னர் வார்டு15, திருவூடல் தெருவில் நடைபெறும் தூய்மை பணியையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, ஆலோசனைகளை வழங்கினார். பின்னர், திருமஞ்சன கோபுரத் தெருவில் தூய்மை காவலர்களுடன் தேநீர் அருந்தினார்.

நிகழ்ச்சியில் தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை.எம்.பி., ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், மேயர் நிர்மலா வேல்மாறன், துணை மேயர் சு.ராஜாங்கம், இல.குணசேகரன், ஆணையாளர் செல்வபாலாஜி, பொதுப்பணித்துறையின் கோட்டப் பொறியாளர்கள் முரளி, ஞானவேல், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், எஸ்.கண்ணதாசன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ. பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை. சுரேஷ், முபாரக், லயன். ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு.எஸ்.பிரபு மற்றும் மாட வீதி ஒருங்கிணைப்பாளர்கள் அருணை வெங்கட், சினம்.பெருமாள், ஆர்.கே.பி.பாஸ்கர், ஜீவரேகாவிஜயராஜ் உட்பட ஆயிரக்கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியத்தில்

க.சுந்தர் முன்னிலையில் அ.தி.மு.க. - பா.ம.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

ஒன்றியச் செயலாளர் டி. குமார் – கழகத்தினர் பங்கேற்பு

காஞ்சிபுரம், அக். 13 - காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் ஒன்றியத்தில், அ.தி.மு.க., மற்றும் பா.ம.க., கட்சிகளைச் சேர்ந்தவர்கள் சாத்தனஞ்சேரி ஊராட்சியில் சுரேஷ் தலைமையில் 25க்கும் மேற்பட்டோர், ஆனம்பாக்கம் கிராமத்தில் பன்னீர்செல்வம் மற்றும் செல்வம் ஆகியோர் தலைமையில் 30க்கும் மேற்பட்டோர், அ.தி.மு.க. மற்றும் பா.ம.க. ஆகிய கட்சிகளிலிருந்து விலகி காஞ்சிபுரம் மாவட்ட கழக செயலாளரும், உத்திரமேரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் முன்னிலையில் நேற்று (12.10.2025) சாலவாக்கத்தில் உள்ள முகாம் அலுவலுகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். அவர்களுக்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் சால்வை அணிவித்து வரவேற்றார்.

இந்நிகழ்வில் சாலவாக்கம் ஒன்றிய கழக செயலாளர் டி.குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள், கலைசெல்வி கோதண்டராமன், கோமளா ஐயப்பன், கிளை செயளாலர்கள், எட்டியப்பன், வீரமணி, வீரபாண்டி, கலை இலக்கிய மாவட்ட துணை அமைப்பாளர் சு.முரளிதரன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வெங்கட்ராமன், வர்த்தகர் அணி அமைப்பாளர் அழகப்பன், எடமச்சி ஊராட்சி மன்ற தலைவர் தர்மராஜ், மாணவரணி அமைப்பாளர் செ.விஷ்ணு, இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் வீ.பழனி, நாகராஜன், மணிகண்டன், உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மாதவரம் தெற்கு பகுதி சார்பில் பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. இதில் டாக்டர் அருண், ஜி.துக்காராம், எஸ்.நந்தகோபால், டி.சுந்தரம், திருமலை, ஜி.துரைசாமி, புத்தகரம் இ.ஏழுமலை, எம்.சரவணன், கே.பி. சுந்தரேசன், எம்.பிரேம்குமார், புலவன் நரசிம்மன், இ.மோகன், விஜயலட்சுமி, ஆனந்தன், மூ.குட்டிமோகன், துறைமுகம் பெருமாள் ராஜேஷ், மகேஷ்லட்சுமி, காந்தன் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கிராம சபைக் கூட்டங்களிலும் புதிய அத்தியாயம்!

முதல்வரின் உரை உண்மையின் பெருமிதம்!

‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, அக்.13- கிராம சபைக் கூட்டங்களிலும் புதிய அத்தியாயம் படைக்கப்பட்டுள்ளது. முதல்வரின் உரை உண்மையின் பெருமிதமாக விளங்குகிறது என்று தினகரன் நாளேடு தலையங்கத்தில் பாராட்டியுள்ளது.

இது குறித்து 12.10.2025 தேதிய ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கூறியதாவது:-

5 ஆயிரம் ஆண்டு தொன்மை வாய்ந்த கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு என்றார் தேசப் பிதா மகாத்மா காந்தி, இந்த வகையில் ஜனநாயகத்தின் முதுகெலும்பாக இருப்பது உள்ளாட்சி அமைப்புகள், ஒன்றிய, மாநில அரசுகளை போல, உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பணிகளும் தொய்வின்றி தொடர வேண்டும் என்பதற்காக நடத்தப்படுபவை கிராமசபை கூட்டங்கள். உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்கவும், கேள்விகள் கேட்கவும், நிராகரிக்கவும், சரி படுத்தவும், தேவையானதை கேட்டுப்பெறவும் இந்த கிராம சபை கூட்டங்கள் வழிவகுக்கிறது. பஞ்சாயத்து ராஜ் என்னும் சட்டம் இதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது. சிறிய அளவிலான சமூகத்தின் தேவைகளை தாங்களே தீர்மானித்து நிறைவேற்றிக் கொள்வதற்கு அதிகாரம் அளிக்கும் அமைப்பு முறையே கிராமசபைகள். கடந்த சில ஆண்டுகளாக தமிழகத்தில் கிராமசபைக் கூட்டம் குறித்த விழிப்புணர்வு பொதுமக்களிடம் அதிகரித்துள்ளது.

தினகரன்

அக்டோபர் 12, 2025 ஞாயிற்றுக்கிழமை

புதிய அத்தியாயம்

5 ஆயிரம் ஆண்டு தொன்மை வாய்ந்த கிராமங்கள் தான் இந்தியாவின் முதுகெலும்பு என்றார் தேசப்பிதா மகாத்மா காந்தி. இந்த வகையில் ஜனநாயகத்தின் முதுகெலும்பாக இருப்பது உள்ளாட்சி அமைப்புகள். ஒன்றிய, மாநில அரசுகளை போல, உள்ளாட்சி அமைப்புகளின் மக்கள் பணிகளும் தொய்வின்றி தொடர வேண்டும் என்பதற்காக நடத்தப்படுபவை கிராமசபை கூட்டங்கள்.

உள்ளாட்சி நிர்வாகத்தில் மக்கள் பங்கேற்கவும், கேள்விகள் கேட்கவும், நிராகரிக்கவும், சரி படுத்தவும், தேவையானதை கேட்டுப்பெறவும் இந்த கிராம சபை கூட்டங்கள் வழிவகுக்கிறது. பஞ்சாயத்து ராஜ் என்னும் சட்டம் இதற்கான அதிகாரத்தை வழங்கியுள்ளது. சிறிய அளவிலான

தமிழகத்தில் நடப்பாண்டு காந்தி ஜெயந்திக்கு நடக்கவிருந்த கிராமசபைக் கூட்டம், நிர்வாக காரணங்களால் ஒத்திவைக்கப்பட்டது. இது அக்டோபர் 11-ஆம் தேதி நடக்கும் என்று அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. இதன்படி தமிழக அரசு நடத்திய கிராம சபைக்கூட்டமும், அதில் முதல்வர் பங்கேற்ற விதமும் ஒட்டு மொத்த இந்தியாவின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

தமிழகத்தில் 12,480 ஊராட்சிகளில் கிராமசபைக் கூட்டம் நடந்தது. இத்தனை கிராமங்களையும் இணையவசதி மூலமாக இணைத்து, கூட்டம் நடத்தப்பட்டது. இதில் காணொலி வாயிலாக முதல்வர் பங்கேற்று பேசியது தான் பெரும் சிறப்பு. இந்திய மாநிலங்களில் திட்டங்களின் முன்னோடியாக திகழும் தமிழ்நிலம், கிராம சபைக் கூட்டத்திலும் புதிய அத்தியாயம் படைத்துள்ளது.

தமிழகத்தின் பெரும் சிறப்பு வாய்ந்த திட்டங்கள், அதன் மூலம் கிடைக்கும் மக்களுக்கான பலன்கள், மாநிலத்தின் வளர்ச்சி இலக்கு என்று அனைத்தையும் புள்ளி விவரங்களுடன் பட்டியலிட்டு முதல்வர் பேசினார். மேலும் ஊராட்சி மன்ற தலைவர்கள், பொதுமக்களிடமும் கருத்துகளை கேட்டறிந்தார். அதோடு கிராமசபை கூட்டத்தில் பரிந்துரைக்கப்படும் தீர்மானங்கள் அனைத்தும் திட்டங்களாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியையும் மக்களுக்கு வழங்கினார்.

தமிழ்நாடு அரசு, நகரங்களுக்கு இணையான கட்டமைப்புகளையும், வசதிகளையும் கிராமங்களிலும் ஏற்படுத்தி வருகிறது. இதில் முக்கியமாக இருப்பது விஞ்ஞானத்தின் வரப்பிரசாதமான இணையதளம். இந்த இணையத்தின் வசதியை குக் கிராமங்களிலும் உருவாக்கி தந்துள்ளது தமிழ்நாடு அரசு. சென்னையில் இருந்து முதல்வர் பேசியது அனைத்து ஊராட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பானது. பைபர் ஆப்டிக் கேபிள் என்னும் இணைய வசதி மூலம் இது சாத்தியமானது. இந்த வகையில் நடந்த கிராமசபைக்கூட்டம் என்பது தமிழகத்தின் அனைத்து கிராமங்களிலும் தங்கு தடையற்ற இணையவசதி உள்ளது என்பதற்கு சாட்சியமாய் அமைந்தது.

“இந்தியாவின் வலிமை கிராமங்களில்தான் இருக்கிறது. இந்தியா கிராமங்களில் தான் வாழ் கிறது என்று நமது தேசத்தந்தை மகாத்மாகாந்தி ஆணித்தரமாக சொன்னார். அப்படிப்பட்ட கிராமங்கள் முன்னேற்ற வேண்டும். கிராம பொருளாதாரத்தை வலிமையாக்க வேண்டும். கிராம நிர்வாகங்கள் வலிமையாக இருக்க வேண்டும். இதை ஜனநாயகப்பூர்வமாக சிந்தித்து திட்டங்களை செயல்படுத்துகிறோம்” என்று முதல்வரின் உரையில் குறிப்பிட்ட வரிகள் அனைத்தும் உண்மையின் பெருமிதம் என்றால் அது மிகையல்ல.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

தாம்பரம் சட்டமன்ற தொகுதி முடிச்சூர் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., பொதுமக்கள் வழங்கிய கோரிக்கை மனுக்களை பெற்று, குறைகளை கேட்டறிந்து அதற்கான தீர்வுகான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள பொது மக்களுக்கு உறுதி அளித்தும் உடனே அந்த இடத்திலேயே அதிகாரிகளிடம் பொது மக்களின் கோரிக்கைகளை முடித்திட உத்தரவிட்டார் இந்நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர், ஊராட்சி செயலர், அரசு அலுவலர்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், நலச்சங்க நிர்வாகிகள், மற்றும் பொது மக்கள் பெரும் திரளாக பங்கேற்றனர்.